# தமிழ்மொழியில், துணைவேந்தரின் உரையின் சாராம்சம்

கொரோனா பெருந்தொற்றானது சமூகத்தின் அனைத்து மட்டங்களிலும் நிலவுவதனால், அதனை முறியடிக்க வேண்டிய கடமை எல்லோருக்கும் உண்டு. எம் பல்கலைக்கழகம் என்ற அடிப்படையில், இப்பெருந்தொற்றினை முறியடிப்பதற்கான தேவைப்பாடு எமக்குள்ளது. இதற்கு உரிய நடவடிக்கைகள் எம்மால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதேவேளை மாணவர்களுக்குத் தேவையானதும் அவர்களை ஊக்குவிக்க கூடியமையுமான பல செயற்பாடுகள் தற்போது இடம்பெறுகின்றன. மாணவர்களின் கல்விநடவடிக்கைகளை சிறந்த முறையில் முன்கொண்டு செல்வதற்கான நிதியையும் பல்கலைக்கழகம் பெற்றுள்ளது. இதனைப் பயன்படுத்தி நாட்டுக்கு சிறந்த குடிமக்களை உருவாக்கும் பணி பல்கலைக்கழக ரீதியில் நடைமுறைப்படுத்தப்படும். இவ்வாண்டிலும் கடந்த ஆண்டிலும் பல்கலைக்கழகத்தின் அனைத்து பீடங்கள், ஊழியர்கள், பணியாளர்கள் என அனைவரது உதவியும் எமக்கு கிடைக்கப்பெற்றது. முக்கியமாக மாணவர்கள் மத்தியிலிருந்தும் ஒத்துழைப்பு நல்கப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கு தேவையான சிற்றுண்டிச்சாலை, விடுதி முதலான வசதிகள் உள்ளிட்ட அனைத்து வசதிகளும் உரிய முறையில் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அடுத்த மூன்று மாதகாலப்பகுதிக்குள் மாணவர்களுக்கான இணையச்சேவை வசதி அமுற்படுத்தப்படும். அவர்களுக்கான சுகாதார வசதிகளும் மேம்படுத்தப்படும். இவற்றுக்கான வேலைத்திட்டங்கள் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. பல்கலைக்கழகம் எனும் அடிப்படையில் மாணவர்களின் கல்வி, விளையாட்டு முதலானவற்றுக்கு தேவையான அனைத்துவிதமான நடவடிக்கைகளும் பீடங்கள், மற்றும் அதன் ஊழியர்களால் செய்துகொடுக்கப் படுகிறது.

மாணவர்கள் செய்யவேண்டிய பணியென நாம் கருதுவதில் முதலாவது, அவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை உடனடியாக பெற்றுக்கொள்ள வேண்டும். பல மாணவர்களிடத்தே இந்த பூஸ்டர் தடுப்பூசியைப் பெறுவதில் தயக்கம் காணப்படுகின்றது. அதைக் கைவிட்டு அனைத்து மாணவர்களும் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்போதைய சூழலில் விவசாய பீடம், விஞ்ஞான பீடம், மருத்துவ பீடம் ஆகியவற்றில் பெருந்தொற்று அதிகமாக

காணப்படுகின்றது. கலைப்பீடம் தனது 50% மாணவர்களை அழைப்பதற்கு முடிவெடுத்துள்ளது. இச்சூழ்நிலையில் கொரோனா தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மாணவர்கள் பூஸ்டர் தடுப்பூசியை கட்டாயம் பெற்றுக் கொள்ள வேண்டும். மாண்வர்கள் மட்டுமின்றி ஊழியர்களும் இந்த பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இது என்னுடைய தாழ்மையான கோரிக்கை ஆகும்.

இதேவேளை சில மாணவர்கள் மத்தியில் சில தவறான நடவடிக்கைகள் இனங்காணப்பட்டு உள்ளன. மோட்டார் சைக்கிளில் செல்லும் போது தலைக்கவசம் அணியாமல் செல்தல், உரையாடுகையில் மனதைப் புண்படுத்தும் வார்த்தைகளைப் பயன்படுத்தல் போன்றன அவற்றுள் சிலவாகும். இவற்றை மாணவர்கள் தவிர்த்துக் கொள்வது நல்லது.

பல்கலைக்கழக சுற்றாடலை அழகாகப் பேணுதல், விரிவுரை மண்டபங்களில் ஸ்மார்ட் போர்ட் பயன்பாடு போன்றவற்றை அமுற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன. மாணவர்கள் மத்தியில் உள்ள கொவிட் 19 தொற்று தொடர்பான எதிர்மறை எண்ணங்கள் பல்கலைக்கழகத்துக்கு உகந்தவை அல்ல. சில மாணவர்களின் செயற்பாடுகள் உளவியல் ரீதியிலான பாதிப்புகளையும் ஏற்படுத்தியுள்ளன. உலகின் சிறந்த பல்கலைக்கழகங்களில் ஒன்றாக பேராதனைப் பல்கலைக்கழகம் தெரிவுசெய்யப்பட்டுள்ள இந்நிலையில், சில மாணவர்களின் செயற்பாடுகள் அதற்கு எதிர்முகமாக உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இது எமக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

எந்தவிதமான பிரச்சினைகள் ஏற்படும் போதிலும் அவற்றைப் பகிரங்கப்படுத்திக் கொண்டிராது, உரிய வகையில் கலந்தாலோசித்து தீர்வுகளைக் காண்பதே உசிதமானது எனத் தெரிவிக்கின்றேன். அத்துடன் இதுவரைகாலமும் ஒத்துழைப்பு அளித்த மாணவர்களுக்கும் நன்றி தெரிவிக்கிறேன்.